**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 70/2020 |
| Name | : Murugesan |
| P.W. | : 2 |
| Father Name | : Dandapani |
| Village | : Kaniyur |
| Taluk | : Madathukulam |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 48 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 24.08.2021

நான் கணியூரில் குடியிருந்து கூலி வேலை செய்கிறேன் . அ.சா.1 எனது மகன் ஆவார்.இறந்து போன சத்தியவாணி எனது மனைவி ஆவார் . எனது மகனும், எனது மனைவியும் வாகனத்தில் செல்லும் போது விபத்து ஏற்பட்டு சிகிச்சைக்கு பின்னிட்டு இறந்துவிட்டார். எனது மனைவியை நான் மருத்துவமனையில் சென்று பார்த்த போது அவர் மயக்க நிலையில் இருந்தார் . 3 நாட்கள் கழித்து இறந்து விட்டார் . என்னிடம் காட்டப்படும் பிரேத விசாரணை சாட்சி சம்மனில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் , அது அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் கையெழுத்து கேட்டார்கள் போட்டேன். படிப்பறிவு இல்லை. எதற்காக போட்டேன் என்று எனக்கு தெரியாது.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனது மகன் ஓட்டி சென்ற வாகனம் மீது ஏதோ ஒரு வாகனம் மோதி விபத்து ஏற்படுத்தியதாக சொன்னார்கள் என்றால் சரிதான் . மறு நாள் எனது மகன் எனது மனைவியுடன் இருந்தாரா என்றால் இருந்தார். நானும் இருந்தேன். நான் எனது மனைவி இறக்கும் வரை எனது மனைவியுடன் இருந்தேனா என்றால் ஆம்.